# தாய் ஒருத்தி நான் எப்போதும் உனக்காக இருக்கிறேன் – அன்னை ஸ்ரீ சாரதா தேவி

உலகம் எதை நோக்கி பயணிப்பது எனத் தெரியாமல் ஓடிக்கொண்டிருப்பதை , நினைத்துப் பார்க்கும் போது , அதில் நானும் இணையாக ஓடிக்கொண்டிருப்பதை உணர முடிகிறது.

இதை பிடிக்காமல் பதிவு செய்யமட்டுமே தோன்றுகிறது. ஒரு பெண்ணாக இருந்து சாதித்துக் காட்டிய பல பெண்மணிகள் என் கண்முன் தோன்றினாலும், எனக்கு இதில் சட்டென்று நினைவுக்கு வருபவர் அன்னை தான்.

எந்த வசதியும் இல்லாத கால கட்டத்தில் வாழ்ந்து , உலகம் போற்றும் சீர்மிகு வாழ்வு பெற்ற அன்னையின் புகழைப்பாட எனக்கு கிடைத்த பெரும் வாய்ப்பாக நான் இதைக் கருதுகிறேன். கவலையை மறக்கச் செய்யும் தீட்சண்யமான பார்வையில் மடிமீது வைத்து தாலாட்டும் பரிவைக் கண்டுள்ளேன்.

இதே உணர்வுதனை குருஜி அன்னையிடம் கண்டதால் மட்டுமே அவரால் யோக நிலையை (தியானம்) எளிதில் எட்ட முடிகிறது என்றும் கூறுவார்.

இந்த உலகில், கொள்ளைக்காரனாக, கொலைகாரனாக, குரூபியாக, கருமியாக இருந்தாலும் கூட இந்த உலகம் அவன் வசப்படவில்லை என்றாலும் கூட இந்த உலகமே அவனை வெறுத்து ஒதுக்கினாலும் கூட , அவனுக்காக காத்திருக்கும் ஒரே மடி அன்னைமடி மட்டுமே. இந்த உலகத்தையே குழந்தையாக்கி, பரிவுடன் நோக்கும் பார்வையை என்னவென்று சொல்வேன் ?

அன்னை ஸ்ரீ சாரதா தேவியின் வாழ்க்கை ஓர் அற்புதம் எனலாம். ஏனெனில் அவர் உலக அன்னையாக, மக்கள் எல்லோரையும் தம் பிள்ளைகளாகப் பாவித்தார். இது உலக வரலாற்றில் அரிதான ஒன்று . இது முழுதும் உண்மை. நாம்தான் அதனைச் சரியாக புரிந்து கொள்ளவில்லை.

அன்னையின் ஏதேனும் ஒரு குணங்கள் ஒவ்வொருவருக்கும் இருந்துவிட்டால் நம் பாரத நாடு ஆன்மிகத்தில் மட்டுமல்லாது, உலக நாடுகளுக்கு முன்னுதாரணமாக திகழும் நிலையில் இருக்கும்.

மாற்றாக , பல்லாண்டுகளாக நம்மிடையே இருக்கும் தீண்டாமை, ஜாதி மதப் பிரிவினை, அடக்கு முறை ஆகியவை இன்றும் இருப்பதற்குக் காரணம் இந்தத் தாயுள்ளம் நமது சமுதாயத்தில் வெளிப்படாததுதான்.

ஒரு பெண் , உடல் மூலமும் உள்ளத்தின் மூலமும் தாய்மையை வெளிப்படுத்தும் தகுதி பெற்று இருக்கிறாள். ஆனால் ஓர் ஆண் உள்ளத்தின் மூலம் மட்டுமே தாய்மையை வெளிப்படுத்த முடியும்.

இன்றைய சமுதாயம் அன்பு என்ற தத்துவத்தின் ஆக்கச் சக்தியில்லாமல் அறிவைக் கொண்டே முன்னேற விழைகிறது. நாம் பராசக்திக்கு கோயில்களில் மட்டுமே இடம் ஒதுக்கியுள்ளோம் . நம் மனதிலும் நடைமுறை வாழ்க்கையிலும் அவளுக்கு இடமளிக்கவில்லை.

இன்றைய சமூகம் தவிர்க்க வேண்டியவை , இம்சை, பொறாமை, பேராசை, போட்டி. இவையே இன்றைய நிலையின் அத்தியாவசியத் தேவைகள். மேற்கண்ட குணங்கள் மனித குலத்தின் மகிழ்ச்சிக்கான முட்டுக்கட்டைகள் என்று அன்னை அடிக்கடி கூறிக்கொண்டு இருப்பார் .

நற்குணங்களை அளிக்கும் சக்தி அன்புக்கு மட்டுமே உண்டு. அன்பை உங்கள் உள்ளே உணர்ந்தீர்களானால் வார்த்தைக்கு ஓர் அர்த்தம் இருக்கும்; செயல்களுக்கு ஓர் இலக்கு இருக்கும்; தைரியத்திற்கு ஓர் காரணம் இருக்கும்; உங்களிடம் அறிவுப் பூர்வமான நேர்மை இருக்கும். அப்போதுதான் ஸ்ரீ சாரதை வெளிப்படுத்திய தாயன்பின் ஆழத்தை உணர்ந்து அவரது உபதேசங்களை செயல்படுத்த முடியும்.

இந்தியக் கலாச்சாரம் மனிதவர்களுக்குத் தாய்மையை எப்படி விரிவடையச் செய்யவேண்டும் என்று கற்றுத் தருகிறது. இறைவனைத் தாயாக மனிதன் நினைக்க ஆரம்பித்ததும் தாய்மை உணர்ச்சிகள் வாழ்க்கையில் பல பரிமாணங்களில் ஊடுருவி அவனது அனுபவங்களையும் எண்ணங்களையும் சிறப்பிக்கின்றன . மனிதர்களிடமும், இயற்கையிடமும் அவன் காட்டும் மரியாதை அதிகரிக்கிறது. அன்பு பல மடங்காகிறது.

அன்னையின் சரிதத்தில், அனுபவ சங்கமத்தைப் படிக்க படிக்க அன்னையின் வழிகாட்டுதலுடன் வாழ்வை நல்லபடியாக அமைத்துக் கொள்ள எனக்கு உதவி வருகிறது. என் மனது கவலைக்குள்ளாகும் போது அன்னையின் கனிவான பார்வை மட்டுமே நினைவிற்கு வரும்.

அது பொங்கும் பாலின் மேல் சில்லென்று ஒரு துளி நீர் தெளித்ததுபோல் என்னுள்ளிருந்து எழும் உணர்ச்சி வெளிப்பாடுகள் அடங்கக் காரணமாகிறது.

அரும்பெரும் குணங்களையுடைய அன்னை சந்திக்காத சவால்களா? என என் நினைவலைகள் வீசும். அந்தத் தியான மண்டபத்தின் வாயிலில் அமர்ந்து அன்னையின் தேஜஸ் ஆனா ஒளி பொருந்திய கண்களைப் பார்த்தபடி என்னை மடிமீது அமரவைத்து சமாதானம் செய்யும் ஜகன்மாதாவாக கருதி மனதை தெளிய வைத்துக் கொள்வேன் .

"இப்படிச் செய் " என்று சொல்லாமல் நம்மைப் போன்ற குழந்தைகளுக்கு யோக முறையை செய்துக்காட்டிய அன்னை அவர்.

" வியாசர், ' த்யான யோக பராயணா ' என்று புகழும் சாவித்திரி போல தம் வாழ்வைத் தம் மக்களுக்கான யோக வாழ்வாக வாழ்ந்த அன்னை, ஒவ்வொரு பிள்ளையையும் தனிப்பட்ட முறையில் இன்றும் கவனிக்கிறார்.

இராமானுஜர் " அஸ்மத் மாதாம் சரண மஹம் ப்ரபத்யே " என உலகங்களுக்கெல்லாம் தாய் என்பதில் என்ன முக்கியத்துவம் உள்ளது? இவள் எனக்குத் தாய் என்பது அல்லவோ விசேஷம் . எனவே நானும் அதுபோல அன்னை சாரதை 'என் அன்னை' என்பதே எனக்கு மிக மிக முக்கியம்.

ஸ்வாமி அபேதானந்தர் கூறியது போல, ' அவளது சரிதம் புனிதமானது; அவள் புனிதமே உருவானவள்; அவளை மீண்டும் மீண்டும் வணங்குகிறேன் .'

அன்னையை ஒரு தாயாக , ஒரு தேவியாக பாவிக்கிறோம் , இது அவரது இரு பரிமாணங்கள் மட்டுமே. “ சிஷ்யை”, “சங்கஜனனி” என அவருக்கு இன்னும் எத்தனையோ பரிமாணங்கள் உண்டு. ஆயினும் அவரது தாய்மைப் பரிமாணங்கள் நமக்கு அதிக இனிமையையும் அமைதியையும் தருகிறது.

இத்தகைய தாயை உலக வரலாற்றில் கொண்டிருக்கிறோமா? இல்லை. அன்னையிடம் வெளிப்பட்டு மலர்ந்த உலகம் தழுவிய தாய்மைக்கு ஈடு இணையில்லை.

ஸ்ரீ இராமகிருஷ்ணருடன் புத்தர், ஏசு, சைதன்யர் என்று பல அவதார புருஷர்களை ஒப்பிடலாம். அனால் அன்னையுடன் ஒப்பிட யாரும் இல்லை. அன்னைக்கு நிகர் அன்னையே! முன்னேறும் பெண்களுக்கு முன்மாதிரி அன்னை இறைவனைத் தாயாக வழிபடுவது என்பது உலக மாதங்களுக்கு நம் பாரதம் வழங்கிய ஈடில்லாத பங்களிப்பு ; பராசக்தியின் அம்சமாகவும், மனித சமூகத்தின் கலாச்சார ஒருமைப்பாட்டிற்க்கும் ஒன்றுபட்ட சக்திக்கும் பின்னணியில் விளங்கும் மகாசக்தியாகவும் தாய்மை திகழ்கிறது.

கணவன், குழந்தைகள், முதியோர், நண்பர் , வேலைக்காரர்கள் போன்ற ஒவ்வொருக்கொருவர் மாறுபட்ட அனைவரையும் உண்மையான தாய்மை அன்பினால் பிணைக்கிறது.

ஸ்ரீ லலிதா சஹஸ்ரநாமத்தில் " புக்தி முக்திப் ப்ரதாயினி " என கூறுவோம் , அதற்கு உண்மையான பொருள் , 'செல்வங்களையும் இறைபக்தியையும் அளிப்பவளும் அவளே '. ஆனால் மனிதன் ஆசைப்படுவதும் , அவனுக்கு ஆரம்ப காலம் முதல் இறுதி மரணம் வரை திருப்தி அழிப்பது இவை இரண்டும் மட்டுமே . ஆகவே அன்னையின் பார்வையில் பராசக்தியை உணர்வதும் இவற்றின் மூலமே.

எளிமை, பொறுமை, தாய்மை, மனத்தூய்மை, போன்ற தனித்தன்மைகள் அன்னை ஸ்ரீ சாரதைக்கு மட்டுமே உரிமை என என் தாழ்மையான கருத்தாகும். எனவே வளமையான , நிம்மதியான வாழ்விற்கு அன்னையை நினைத்தாலே போதும். காற்றின் வேகத்தில் ஓடி வந்து அன்பூட்டி நம்மை நல்வழிகாட்டுவார் .

எனவே அன்னையை எப்போதும் நினையுங்கள்;, அவளின் அன்பால் பிறரிடம் பிணையுங்கள்; பரவசத்தில் அவளை உணருங்கள் ; நன்றி .